[29th April 1960

Government advertisements in newspapers

*870 Q.—Sri T. S. RAMASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the amount given to each of the Tamil and English dailies in the State and outside by the Madras Government by way of advertisements during this financial year and the last two financial years; and

(*b*) the criterion which governs the choice of the newspapers and the quantum of advertisement charges?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) A statement[a] showing the particulars so far collected is placed on the table of the House. Reports from a few heads of departments are still due. As soon as they are received, a supplemental statement will be placed on the table.

(*b*) Newspapers are selected according to the circulation figures and their tone of contents. The area or class of readers to whom a particular advertisement is directed is also another important factor in deciding the daily to which the advertisement is to be released.

There is no set criterion governing the quantum of advertisement charges. It varies according to the importance of the matter to be advertised, the prominence it should get, mechanical details like the length of the matter, etc.

Sri T. S. RAMASWAMI: May I know the reason why the advertisement charges in the case of Tamil papers are less than in the case of English papers? How is it that the Government pay them more than they pay to Tamil papers? Has the policy of the papers got anything to do with advertisements?

The Hon. Sri C. SUBRAMANIAM: Advertisement charges in English papers are more because more insertions are given there particularly when they have got to be All-India advertisements. Advertisements in Tamil will not be helpful because they may not get to the notice of the people living in various other States. The policy of the paper is not taken into consideration but still if the policy is something totally opposed to the Constitution or to the general policy of the Government, that also will be taken into consideration.

Sri V. K. KOTHANDARAMAN: தமிழ், ஆங்கிலம் அரைகுறையாகப் படித்த மக்கள், சாதாரண மக்கள் 90% இருக்கும் போது ஆங்கில விளம்பரத்தில் ஆறில் ஒரு பங்குதான் தமிழுக்கு கொடுக்கப்படுகிறது. ஆகவே, அதிகப்படி தமிழ் பத்திரிக்கைகளுக்கு விளம்பரம் கொடுக்காததற்குக் காரணமென்ன? அதே போன்று பத்திரிக்கைகள் இத்தனை தினசரி ஓடினால்தான் அதற்கு விளம்பரம் கொடுக்க வேண்டுமென்று சர்க்காருக்கு ஏதாவது ஒரு வரம்பு நிர்ணயிப்பு இருக்கிறதா? அதன் விவரம் என்ன?

The Hon. Sri C. SUBRAMANIAM: இரண்டு கேள்விகள் கேட்டார்கள். முதல் கேள்வி தமிழ் பத்திரிக்கைகளுக்கு ஏன் அதிகம் கொடுக்கவில்லை என்பது. ஆங்கிலப் பத்திரிகைகளில்

---

[a] Printed as Appendix II on page 885 infra.

29th April 1960]

போடக் கூடியதை, ஆங்கிலம் படித்து தகுதி பெற்றவர்கள் அந்த உத்தியோகத்திற்கு வரவேண்டுமென்பதற்காக. ஆங்கிலம் படிக்கத்தெரியாதவர்கள் அதைப் படித்துவிட்டு உத்தியோகத்திற்கு வரப்போவதில்லை. அதையெல்லாம் அனுசரித்து கொடுக்கப்படுகிறது. ஆங்கிலம் படித்தவர்கள் அதிகம் பேர்கள் இருப்பதால் ஆங்கிலத்தில் கொடுக்க வேண்டியிருக்கிறது. தனிப்பட்ட பத்திரிகைகளுக்கு அவர்கள் அட்வர்ட்டைஸ்மென்ட் கேட்கும்போது எந்தளவிற்கு அப்பத்திரிகை செலவாகிறது, எந்தப் பகுதியில் அவை செலவாகிறது என்பதைக் கவனித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும்.

SRI A. GOVINDASAMY: நம் லைப்ரரியில் வைக்கப்பட்டிருக்கிற ஜனசக்தி, தனியரசு, நம் நாடு, போன்ற பத்திரிகைகளுக்கு ஏன் விளம்பரம் தரவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: தனியரசு, நம்நாடு, இது போன்ற பத்திரிகைகள், நாட்டைப் பிரிக்கவேண்டுமென்ற கொள்கையுடையவைகளுக்கு இந்த அரசாங்கம் அட்வர்ட்டைஸ்மென்ட் கொடுக்க முடியாமல் இருக்கிறது.

SRI S. NAGARAJA MONIGAR: கொள்கையளவில் சர்க்கார் திட்டங்களை கொஞ்சம் கூட ஒத்துக்கொள்ளாமல் எதிராகவே எழுதிவரும் பத்திரிகைகள் பணம் வருகிறது என்பதற்காக கொள்கையை விட்டு விட்டு பிரசுரிக்க எந்தெந்தப் பத்திரிகைகள் முன் வந்து கேட்கின்றன? அவை எவை எவை?

(பதில் இல்லை.)

SRI R. KRISHNASWAMI NAIDU: ஆங்கிலம் கற்றவர்கள் கிராமப்பகுதிகளில் அதிகம் பேர்கள் இருக்கிறார்கள். அங்கு அநேகமாக ஆங்கிலப் பத்திரிகைகள் செல்வதில்லை. ஆகவே, அவர்களுக்கு உதவியாயிருக்க, விளம்பரங்களை பரவலாக தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் கொடுக்க வேண்டியது அவசியமில்லையா?

THE HON. SRI C. SUBRAMANIAM: கிராம மக்கள் தெரிந்து கொள்வதற்கு விளம்பரங்கள் தமிழிலும் கொடுக்கப்படுகிறது. ஆனால் உத்தியோகங்களுக்காக போடும்போது கிராமப் பகுதியாக இருந்தாலும், உத்தியோகத்திற்கு வருபவர்களாயிருந்தால் அவர்களும் ஆங்கிலப் பத்திரிகைகள் படிக்கக் கூடியவர்களாகத்தான் இருப்பார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN: கொள்கையை ஒப்புக் கொள்வதாக ஒப்புக்கொண்டு மறைமுகமாக வேட்டு வைக்கக் கூடிய பத்திரிகைகளுக்கு கொடுப்பதை விட பகிரங்கமாகவே கொள்கைக் கோளாறு இருக்கிறது என்று எடுத்துச் சொல்லக்கூடிய பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பதில் தவறு என்ன?

(பதில் இல்லை).

[29th April 1960

SRI A. GOVINDASAMY: நாட்டைப் பிரிக்கிற கொள்கையை அடிப்படையாக வைத்திருக்கிற காரணத்தினால் விளம்பரம் தர வில்லை என்று சொன்னார்கள். விளம்பரம் தருவதற்கும் நாட்டுப் பிரிவினைக் கொள்கைக்கும் என்ன சம்பந்தம்? அந்த அடிப் படையில் நிராகரிக்கப்படுகிறது என்றால், ஜன சக்தி நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று எழுதவில்லையே. அதற்கு ஏன் கொடுக்க வில்லை?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதுதான் சொன்னார்களே வேட்டு வைக்கும் பத்திரிகை என்று. இது அதில் சேருகிறது. நாட்டுப் பிரிவினைக் கொள்கை உள்ள பத்திரிகைகளை நாட்டுப் பிரிவினை வேண்டுமென்று யார் யார் நினைக்கிறார்களோ அந்த பகுதி மட்டும்தான் இதை வாங்கிப் படிக்கிறார்கள். பொதுவாக மக்கள் வாங்கி அவைகளைப் படிக்காததால் அவைகளுக்கு அட்வர்ட்டைஸ் மென்ட் கொடுக்கப்படவில்லை.

Basic Education Craft Equipment Stores

*371 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M.P. SARATHI): கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஆதாரக் கல்வி தொழிற்பயிற்சிக் கருவிகள் ஸ்டோர் கள் (Basic Education Craft Equipment Stores எங்கெங்கு எத்தனை இருக்கின்றன?

(ஆ) அவைகளைத் தணிக்கை செய்ய (Auditing and verification of stores) என்ன முறை கையாளுகிறது

(இ) அவைகளில் காணப்படும் குறைபாடுகள் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) to (இ) statement[a] is placed on the table of the House.

SRI R. KRISHNASWAMI NAIDU: 1959-60-ல் ஆரம்ப ஆதாரப் பள்ளியில் கிட்டத்தட்ட 9, 10 மாத காலமாக சென்ட்ரல் ஸ்டோர் களுக்கு பஞ்சு சப்ளை செய்யப்படாமல் ராட்டைகள் வேலை செய்யாமல் இருந்தன. அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன?

THE HON. SRI C. SUBRAMANIAM: முறையிலே சில தவறுகள் ஏற்பட்டிருந்தன. அவை இப்பொழுது சரி செய்யப்பட்டு பஞ்சு கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

Shenkottah High School

*872 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Finance be pleased to state the present stage of the proposal to have agricultural land for the Shenkottah High School?

THE HON. SRI C. SUBRAMANIAM: The matter is under consideration.

---

a Printed as appendix III on pages 886–887 infra.